www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல்<br>Geography | Three Hours<br>Gr -12 (2023) | 22 | T | I,II |

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**
- இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III, பகுதி IV, பகுதி V ஆகிய பகுதிகளில் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. இலங்கையின் நெல்விளை நிலங்களில் அதிகளவில் ஏற்பட்ட மாற்றங்களை மாவட்ட அடிப்படையில் எடுத்துக் காட்டுவதற்கு மிகப் பொருத்தமாகப் பயன்படும் படங்கள்
   (1) இடவிளக்கப்படங்கள் (2) கோட்டு வரை படங்கள் (3) வட்ட வரைபு
   (4) கருப்பொருள் படங்கள் (5) சமகணியப் படங்கள் (.......)

2. இலங்கையின் 1: 50, 000 அளவுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட இடவிளக்கப்படங்களில் நிர்வாக எல்லைகளை வரைந்து காட்டுவதற்குப் பயன்படும் நிறம்
   (1) சிவப்பு (2) கறுப்பு (3) கபிலம் (4) நீலம் (5) பச்சை (.......)

3. தொலையுணர்வு தொழில்நுட்ப முறையில் செய்மதிகள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பப்படும் முறை.
   (1) எண்ணிலக்கத் தரவுகளாக (2) செய்மதிப்படிமங்களாக (3) காவித்தரவாக
   (4) குறியீடுகளாக (5) நிறங்களாக (.......)

4. தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் (Rs) தரவு சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தொலையுணர்வு மேடைகளில் உணர்விகள் பொருத்தப்படும் மேடைகளின் எண்ணிக்கை யாது?
   (1) 10 (2) 8 (3) 7 (4) 5 (5) 3 (.......)

5. இடவிளக்கப்படம் ஒன்றில் எடுத்துக் காட்டப்படும் இரண்டு பௌதிக அம்சங்கள்
   (1) குளம், நீர் வீழ்ச்சி (2) காடு, நதி (3) வீதி, ஆற்றிடைத்தீவு
   (4) காடு, கால்வாய் (5) சேற்று நிலம், நெற்செய்கை (.......)

6. கீழே தரப்பட்டுள்ள சோடிகளில் இருந்து அடையற்பாறை வகையைச் சேர்ந்த பாறைகளைத் தெரிக.
   (1) மணற்கல், நிலக்கல் (2) கப்புரோ, எலைட் (3) தயரொயிட், ஒட்சிடியன்
   (4) வொட்சைட், சலவைக்கல் (5) சுண்ணக்கல், கப்புரோ (.......)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

7. எரிமலை வெடிப்பு இடம்பெறாத தகட்டு எல்லைப் பகுதி எது?
   (1) விலகும் தகட்டு எல்லைப் பகுதி
   (2) உருமாற்றக் குறைத் தகட்டு எல்லைப் பகுதி
   (3) கண்டத் தகடும் கண்டத்தகடும் ஒருங்கும் பகுதி
   (4) சமுத்திரத் தகடும், கண்டத்தகடும் ஒருங்கும் பகுதி
   (5) சமுத்திரத் தகடும், சமுத்திரத் தகடும் ஒருங்கும் பகுதி (…….)

8. மியாந்தர் வளைவில் இருந்து நதி தன்போக்கினை மாற்றிப் பாயும் போது உருவாகும் நிலவுருவம் எது?
   (1) வெள்ளச் சமவெளி (2) உயரணைகள் (3) பின்னிய ஆறு
   (4) பனியெருத்தேரி (5) பின் அடர்சேறு (…….)

9. தென்மேல் மொன்சூன் காலத்தில் இலங்கையில் அதிகளவு மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் மாவட்டங்கள்
   (1) பதுளை, மொனராகல (2) கம்பளை, கேகாலை (3) கொழும்பு, இரத்தினபுரி
   (4) கண்டி, நுவரெலியா (5) அம்பாறை, அம்பாந்தோட்டை (…….)

10. வானிலையுடன் தொடர்புடைய மூலகங்களைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிக.
   (1) வெப்பநிலை, ஈரப்பதன், படிவு வீழ்ச்சி
   (2) காலநிலை, வெப்பநிலை, காற்று
   (3) அமுக்கம், முகில்களின் தன்மை, காலநிலை
   (4) அமுக்கம், மழைவீழ்ச்சி, சூரியப்புள்ளி
   (5) சூரியப் புள்ளி, காலநிலை, முகில்களின் தன்மை (…….)

11. .கிராமக் குடியிருப்பின் தொழில் கட்டமைப்பில் காணப்படுகின்ற முனைப்பான அம்சம்
   (1) சேவைத் துறையில் ஈடுபடுபவர்கள் அதிகம்.
   (2) கைத்தொழில் துறையில் ஈடுபடுபவர்கள் அதிகம்.
   (3) முதல் நிலைத் தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிகம்.
   (4) உட்கட்டுமானப் பணிகளில் ஈடுபடுபவர்கள் அதிகம்.
   (5) சேவை, கைத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிகம். (…….)

12. இலங்கையின் கரையோர வலயங்களில் அமைந்திருக்கும் குடியிருப்புக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கை
   (1) நெற்பயிர்ச் செய்கை (2) பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை (3) மீன்பிடி
   (4) வர்த்தகம் (5) சேவை (…….)

13. நகர மையங்களின் படிமுறையமைப்பினை ஏறுவரிசை ஒழுங்கில் சரியாகக் காட்டும் தெரிவு எது?
   (1) நகரம், தலைநகரம், பெருநகரக் கூட்டு பெருநகரம்
   (2) பெருநகரம், பெருநகரக் கூட்டு, தலைநகரம், நகரம்
   (3) பெருநகரம், பெருநகரக் கூட்டு, நகரம், தலைநகரம்
   (4) தலைநகரம், பெருநகரக் கூட்டு, பெருநகரம், நகரம்
   (5) நகரம், பெருநகரக் கூட்டு, பெருநகரம், தலைநகரம் (…….)

14. இலங்கையின் குடித்தொகையில் வயது முதிர்ந்த குடித்தொகையின் அதிகரிப்பில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணங்களில் ஒன்று
   (1) நவீன சுகாதார மருத்துவ வசதி
   (2) மக்களின் இடப்பெயர்வு
   (3) சிசு மரண வீத குறைவு
   (4) உட்கட்டுமான விருத்தி
   (5) தகவல் தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி (…….)

15. விவசாய உள்ளீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத்தினை அதிகளவில் கொண்டுள்ள நாடு
   (1) பாகிஸ்தான் (2) இந்தியா (3) பிலிப்பைன்ஸ்
   (4) இந்தோனேசியா (5) ஜப்பான்

(…….)

(15 x 1 = 15 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்
- இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி *20* மீற்ரரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு
- படத்தின் மேல் விடைகள் எழுதக் கூடாது
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்

1. இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 1:50,000 என்னும் அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக் கோட்டு இடைவெளி *20* மீற்றர்களாகும் அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   (i) B411 பிரதான வீதியில் உள்ள பாலங்களின் எண்ணிக்கை யாது? *(01 புள்ளி)*

   (ii) சதுரம் D யில்
      (a) செய்கை பண்ணப்படும் பயிர்
      (b) போக்குவரத்து வீதி என்பவற்றைப் பெயரிடுக. (01 புள்ளி)

   (iii) G என்ற அடைக்கப்பட்ட பகுதியில் உள்ள சேவை மையங்கள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (iv) படப்பகுதியின் பயிர்ச் செய்கைப் பரம்பலைத் தீர்மானித்துள்ள இரண்டு பௌதிகக் காரணிகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

   (v) படப்பகுதியின் மேற்குப் பகுதியில் குடியிருப்புப் பரம்பலை வறையறுத்துள்ள இரண்டு காரனிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (vi) சதுரம் D யை *1: 25, 000* என்ற அளவுத்திட்டத்தில் வரைந்து காட்டுக. *(02 புள்ளிகள்)*

   (vii) உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் வட பகுதியை அபிவிருத்தி செய்வதாக இருந்தால் மேற்கொள்ளக் கூடிய இரண்டு விடயங்களை விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

   (i) அந்தீஸ் மலைத்தொடர்
   (ii) மறேடாலிங் நதி
   (iii) மெச்சிக்கோ குடா
   (iv) கீல் கால்வாய்
   (v) கோபிப் பாலைவனம்
   (vi) டோக்கியோ நகரம்
   (vii) மத்திய கோடு
   (viii) மத்திய தரைக்கடல்
   (ix) *2022* உலகக் கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற நாடு
   (x) பாற் பண்ணைக் கைத்தொழிலில் விருத்தியடைந்துள்ள தென்னரைக் கோள நாடு

   *(10 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - III பௌதிகப் புவியியல்

3. (i) அகவிசையினால் புவியில் உருவாகின்ற நான்கு நிலவுருவங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) தகடுகள் அசைவிற்கு உட்படுகின்ற மூன்று முறைகளையும் விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) காற்றரிப்பின் மூன்று அரித்தல் செயல் முறைகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) காற்றரிப்பினால் பாலைவனப்பிரதேசங்களில் உருவாகின்ற மூன்று நிலவுருவங்களை இடவிளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) காலநிலையைக் கட்டுப்படுத்தும் நான்கு காரணிகளைத் தருக. (02 புள்ளிகள்)
   (ii) கெப்பனின் அயன ஈரக்காலநிலை பரந்துள்ள இரண்டு பிரதேசங்கள், அக்காலநிலையின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையின் மழைவீழ்ச்சிப் பரம்பலை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் காலநிலையில் காணப்படும் மூன்று தனித்துவமான இயல்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி - IV மானிடப்புவியியல்

5. (i) பருமட்டான பிறப்பு வீதம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பருமட்டமான பிறப்பு வீதம் உயர்ந்தளவில் காணப்படுவதற்கான மூன்று காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையின் சனத்தொகைப் பரம்பலை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் மூன்று கிராமக்குடியிருப்புகளைப் பெயரிட்டு அவற்றின் பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) பசுமைப் புரட்சியின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட நான்கு விடயங்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (ii) பசுமைப் புரட்சியினால் ஏற்பட்ட மூன்று சுற்றாடல் தாக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) சேதனப் பயிர்ச் செய்கையின் மூன்று நன்மைகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையில் விவசாயத்துறை எதிர் நோக்குகின்ற மூன்று சவால்களை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி - V செய்முறைப் புவியியல்

7. (i) கருப்பொருள் படம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) கருப்பொருள் படங்கள் தயாரிக்கப்படும் இரண்டு முறைகளைத் தருக. (02 புள்ளிகள்)
   (iii) இடவிளக்கப்படங்களின் மூன்று பயன்பாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இடர் முகாமைத்துவத்தில் செய்முறைப் புவியியலின் நுட்பமுறைகள் பயன்படுத்தப்படும் இரண்டு சந்தர்ப்பங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

8. (i) புவியியல் தகவல் முறைமை(GIS) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) புவியியல் தகவல் முறைமையின் பிரதான கூறுகள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (iii) புவியியல் தகவல் முறைமையின் மூன்று பயன்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) மூன்று பயன்பாடுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk


agaram.lk